[19th August 1961

Agricultural Fabricator

* **1269 *Q*.—Sri V. K. KOTHANDARAMAN :** கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

விவசாயிகளுக்காகவென்று கொடுக்கப்படும் ஸ்டீல் லைசென்சுகளை (Agricultural Fabricator) விவசாய இலாகா அதிகாரிகள் மூலம் விநியோகம் செய்ய உத்தேசமுண்டா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : No, Sir.

Illicit distillation

* 1270 *Q*.—SRI T. S. RAMASWAMI : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) the steps taken by the Government to stop people from taking spurious preparations and other dangerous drugs in the place of alcohol and the illicit distillation in the various parts of our State:

(*b*) whether the Government have undertaken any serious survey in this regard; and

(*c*) if so, when, and the details thereof?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) A statement[a] showing the steps taken by the Government to prevent people from taking spurious preparations and other dangerous drugs in the place of alcohol and the illicit distillation in the various parts of our State is placed on the table of the House.

(*b*) Apart from the enquiry undertaken by the Madras Prohibition Enquiry Committee, appointed under the Chairmanship of Sri K. A. Nachiappa Gounder in 1947 to examine the question of the working of prohibition in the districts, the Government have not undertaken any serious survey in this regard.

(*c*) Does not arise.

SRI T. S. RAMASWAMI : Under the guise of Ayurvedic medicine spurious drugs, like 'Arishtam' is being sold in Ayurvedic dispensaries. Thousands of people are addicted to it. May I know, Sir, whether the Government will enquire into the matter and see that the drug 'Arishtam' is not sold in public without restriction?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : The Government have been examining every now and then the contents of the medicines and taking adequate action.

SRI A. V. P. ASAITHAMBI : குடிப்பழக்கத்தைத் தவிர்க்க முடியாதவர்கள்தான் இம்மாதிரி கள்ளத்தனமானவைகளைத் தயாரிக்க முற்படுகிறார்கள். வெளிநாட்டுப் பானங்களை சிலருக்கு பெர்மிட் மூலம் விநியோகிப்பதுபோல் உள் நாட்டிலும் நல்ல முறை

---

[a] Printed as Appendix VII on pages 456–458 infra.

யில் இருக்கிற சாராயம், கள் போன்றவைகளை விரும்புகிறவர்களுக்கு பெர்மிட் மூலம் வழங்க அரசாங்கம் ஏற்பாடு செய்து இதைத் தடுக்க முடியுமே, அதைப்பற்றி யோசிக்க உத்தேசமுண்டா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : குடிப்பழக்கம் மட்டுமல்ல. எவ்வளவோ கெட்ட பழக்கங்கள் மனிதர்களிடம இருக்கின்றன. அதற்காக அதைத் திருப்தி செய்வதற்கு நடவடிக்கைகள் எடுத்துக் கொள்வது சரியல்ல.

SRI N. K. PALANISAMI : Since 'Arishtam' contains iron contents, will the Government take steps not to prohibit such medicines?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : I may tell the hon. Member that there is no proposal to prohibit 'Arishtam' as such. Whether it is 'arishtam' or any other drug on examination and analysis if it is found to contain too much alcohol then action will be taken.

SRI A. A. RASHEED : May I know, Sir whether on the pretext of prohibition toilet preparation required for the ladies have been declared as spurious?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : I have no such information, Sir.

SRI A. V. P. ASAITHAMBI : உடல் அலுப்பு தீருவதற்காக பலர் கள், சாராயம் போன்றவைகளைக் குடிப்பதில் கெடுவதில்லை என்று நிபுணர்கள் சொல்கிறார்கள். எனவே, அளவோடு குடிப்பதற்கு விரும்புகிறவர்களுக்கு பெர்மிட் கொடுத்தால் இந்தமாதிரி ஏற்படாமல் இருக்குமே, ஆகவே அரசாங்கம் இதைப் பரிசீலிக்குமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அரசியல் அமைப்புச் சட்டம் இருக்கிறது. நாம் இயற்றியிருக்கும் மதுவிலக்குச் சட்டம் இருக்கிறது. இந்தச் சட்டத்தின்கீழ்தான் நடவடிக்கைகள் எடுக்கிறோம். அதை மீறி அரசாங்கம் ஒன்றும் நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ள முடியாது.

SRI M. P. PERIASAMY : அளவுக்கு மீறி குடித்து அதிக போதை உள்ளவர்களுக்கு குறைந்த தண்டனையும், நிதானமாக குடித்தவர்களுக்கு தண்டனை அதிகம் என்ற முறையில் அரசாங்கத்தில் சட்டம் ஏதாவது இருக்கிறதா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : தண்டனை கொடுப்பது கோர்ட்டார், அரசாங்கமல்ல.

Glue factory

* 1271 *Q.*—SRI V. K. KOTHANDARAMAN : கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) வடாற்காடு ஜில்லாவில் 'கம்' (glue) தயார் செய்யும் தொழிற்சாலை ஆரம்பிக்கும் உத்தேசமுண்டா ?